**OS.No.69/2011** **P.W.1-** ரமேஷ் **02.02.2026**

<u>**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வழக்குரையின் தாவா சொத்து என் தாத்தா வீரராகவனுக்கு பாக பிரிவினை பத்திரம் பாத்தியம் என்று கூறியுள்ளேன். அந்த பாக பிரிவினை பத்திரம் சின்னம்மாள், வீரராகவன் மற்றும் ஆதிகேசன் ஆகிய மூவருக்கும் நடந்த பத்திரம் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினை பத்திர எண்.1755/1975 என்றால் சரிதான்(பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த பாக பிரிவினை பத்திரத்தில் வழக்கு சொத்தானது 29 சென்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் 1984 க்கு பிறகு எங்கள் அனுபவத்தில் இருப்பதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்குச் சொத்தை 1984 ல் 2ம் பிரதிவாதிக்கு மற்றும் 1990 ல் 3 ம் பிரதிவாதிக்கும் விற்ற விவரம் உங்களுக்கு எப்படி தெரியவந்தது என்றால் 2008 ல் தெரியவந்தது. 20.08.2008 ற்கான வா.சா.ஆ.1, 1.1.1987 முதல் 09.08.2008 ற்கான EC தான். 12.09.2008 ஆன EC 01.01.1987 முதல் 09.09.2008 ற்கான EC தான். 1984 ல் 2ம் பிரதிவாதிக்கு விற்ற விவரம் மேற்கண்ட EC ல் இல்லை என்றால் சரிதான். ஆகையால் 1984 ல் விற்ற விவரங்கள் EC மூலமாக தெரியவந்தது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை 3வது நபர்கள் பார்த்து செல்வதாக அக்கம் பக்கத்தினர் கூறினார்கள் என்ற விவரம் என் தம்பிக்கு தான் தெரியும். இந்த வழக்கில் எல்லா வாதிகளுக்கும் சேர்த்து தான் நான் சாட்சி சொல்கிறேன். இந்த வழக்கில் வா.சா.ஆ.4,5,6 சான்றிட்ட நகல் எப்போது வாங்கினேன் என்றால் என் தம்பிக்கு தான் தெரியும். வா.சா.ஆ.5 ல் இந்த சொத்தை குடும்ப செலவிற்காகவும், இதர சில்லரை கடன்களை தீர்க்கவும் கிரயம் செய்ய இருந்த போது, தாங்கள்

எங்களைச் சந்தித்து கிரயத்துக்கு கேட்க நாங்கள் சம்மதித்து இந்த சொத்தை விற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு விற்க அவசியமில்லை. வா.சா.ஆ.2 சட்ட அறிவிப்பு தேதி 12.01.2011 வாதிகள் 1 முதல் 5 நபர்கள் மட்டும் தான் பிரதிவாதிகள் 1 முதல் 3 ஆகியோருக்கு சட்ட அறிவிப்பு வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பு கொடுக்கும் போது குமார் உயிருடன் இருந்தார். சட்ட அறிவிப்பில் 1984 மற்றும் 1990 களில் ஏற்பட்ட கிரய பத்திரங்கள் சட்டப்படி செல்லதக்கதல்ல என்று கூறியுள்ளேன். 1990 ல் ஏற்பட்ட கிரய பத்திரத்தில் குமாரும் ஒரு தரப்பினர் என்றால் எனக்குத் தெரியாது. அவ்வாறு அவர் கையொப்பம் செய்திருப்பதால் தான் அவருக்கு வாதிகள் சட்டஅறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சட்ட அறிவிப்பை 6, 7, 8 வாதிகளுக்கும் மற்றும் அவரது தாயாருக்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் வழக்குரை பத்தி 6 ல் நான் பல முறை பிரதிவாதியை வலியுறுத்தியும் அது வீணானது என்று கூறியுள்ளேன். அவ்வாறு நான் கூறியிருப்பதை போல பலமுறை பிரதிவாதிகளை கேட்கவில்லை என்றால் சரியல்ல. 3ம் பரதிவாதி 27.8.2015 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என் தகப்பனாருக்கு தாவா சொத்துகள் 1984, 1990 ஆகிய ஆண்டுகளில் கிடைக்கபெற்று அவர் தனித்து அனுபவித்து வந்து அதனை 3,4 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்ததாக எதிர்வாதுரை செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிர்வழக்குரையில் 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்கான பட்டா தங்கள் பெயரில் மாறியுள்ளது என்று கூறியுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் அனுப்பிய சட்ட அறிவிப்புக்கு 3ம் பிரதிவாதி 2.2.2011 ல் பதில் அனுப்பினார் என்றால்

எனக்குத் தெரியாது. அந்த பதில் அறிவிப்பில் பட்டா தன் பெயரில் மாறியுள்ளது என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறு மாறவில்லை. 3 ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்படுவதற்கு முன்னரே அவர் 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்றுவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. 1984 முதல் வழக்குச் சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றும் எனவே வழக்குச் சொத்தை பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றால் சரியல்ல. உண்மையில் வழக்குச் சொத்தில் நாங்கள் அனுபவம் செய்திருந்தால் அதற்குறிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. எனவே எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.